அரக்கோணம் நகராட்சி
சிறப்பு மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண். 20 நாள் 01.02.2018.

பொருள் : சிறப்பு மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 02.02.2018 வெள்ளி கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 02.02.2018 வெள்ளி கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உள்ள மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

வார்டு மறு வரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும் தெருக்கள்/ நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தெருக்களின் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு முன்மொழிவு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வரைவு முன்மொழிவு மறுவரையறை ஆணையத்தின் பரிசீலனைக்கு பின் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசணைகள், ஆட்சேபணைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களில் அறிவிப்பு பலககையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை குறிப்பிட்டு இந்நகராட்சியிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மறுவரையறை ஆணையத்திடமும் நேரடியாக/ தபால் மூலம் /மின்னஞ்சல் வழியாகவும் 119 மனுக்கள் வரப்பெற்றது. இவை பரிசீலனை செய்யப்பட்டு மறுஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிசீலனையில் இறுதி வரைவு வார்டு மறுவரையறை முன்மொழிவு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி முன்மொழிவு வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்கவும் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2639/2017/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**